திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதி, மலைப்பகுதியில் சாலைகள்.

643— (*வினா எண். 7316)—திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் மலைப் பகுதி கிராமங்களுக்கு சாலை போட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதிக்குட் பட்ட பச்சைமலைப்பகுதியில் பழங்குடியினர் பகுதி முன்னேற்றப் பணிகள் துணைத் திட்டத்தின் மூலம் சோபனாபுரம் முதல் டாப் செங்காட்டுப்பட்டி வரை சாலை மேம்பாடு செய்தல் மற்றும் செங்காட்டுப்பட்டி முதல் மூலக்காடு மணலோடை வழியாக செம்புளிச்சாம்பட்டிக்கு சாலை மேம்பாடு செய்தல் ஆகிய இருவேலைப் பணிகளுக்கு ஆணை வழங்கப்பட்டு மேற்படி சாலை வேலைப்பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 1987-88 ஆம் ஆண்டு பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தில் டாப் செங்காட்டுப்பட்டி முதல் தேனூர் வரை சாலை அமைத்து மேம்பாடு செய்யும் வேலை சேர்க்கப்பட்டுள்ளது. இவை நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படும்.

திருமதி இரா. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டுவரை பச்சைமலை சாலைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1977 ஆம் ஆண்டிலிருந்து 1986 ஆம் ஆண்டு வரை பழங்குடி மக்களுடைய நலத்திற்காக, அந்த மக்களுக்கு பாதை வசதி செய்து கொடுப்பதற்கு தமிழக அரசால் 14 கோடியே 98 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 380 கிலோமீட்டர் தூரம் சாலை அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று அதிலே 12 பாதைகள் அமைத்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. மீதிப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் பச்சைமலையில், உப்பிலியாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சோபனாபுரம் முதல் டாப் செங்காட்டுப் பட்டி வரையும், துறையூர் ஒன்றியத்தில் மூலக்காடு முதல் செம் புளிச்சாம்பட்டி வரையிலும் செல்லக்கூடிய சாலையைத் தார் சாலையாக அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் நலத் திட்டத்தின்கீழ், நிதிநிலைமைக்கேற்ப அது செயல்படுத்தப்படும்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பச்சைமலைப் பகுதியில், என்னுடைய தொகுதியில் 32 கிராமங்கள் இருக்கின்றன. அதில் கூடமலை யிலிருந்து நரிப்பாடிக்கு ஒரு சாலை ஏற்கனவே 6 கிலோ மீட்ட ருக்கு அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தச் சாலையில் மக்கள் ஏற்கனவே நடந்து சென்று கொண்டு இருந்த நிலை மாறி அவர்கள் இன்றைக்கு நடந்துகூட செல்ல முடியாத நிலையில், முரம்பைக் கொட்டி, அவர்கள் சைக்கிளிலும் செல்லமுடியாத நிலை இருக்கிறது. அதை மீண்டும் சீர்படுத்தி, அதன் குறுக்கே உள்ள ஓடைகளைச் சரி செய்து கொடுக்க மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அரசு நடைமுறைப் படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை பற்றிய விவரம் என்னிடம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடம் எழுதிக் கொடுக்கின்றபோது அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

தனியார் தொழிற்சாலைகளில் ஆதி திராவிடர்களுக்கு இட ஒதுக்கீடு.

644—(*வினா எண் 9257)—திருமதி டி. யசோதா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் தொழிற்சாலைகளில் ஆதி திராவிடர்களுக்கு வேலை வாய்ப்பில் 18 சத விகிதம் இட ஒதுக்கீடு செய்யப்படு கிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

TRUTH ALONE TRIUMPHS